சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.05.08.2024

OS.No. 68/2022

PW 1 : ஜோசப் ஸ்டீபன் (வயது 66 ) த/பெ. மாணிக்கம்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் வழக்கின் வாதி. வாதி தரப்பு 1 ஆம் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை. தாவா சொத்தை காட்டக்கூடிய மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.1**. (தவறான வரைபடம் என்ற ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு) 06.12.1960 ஆம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் அசல் **வா.சா.ஆ.2**. 21.05.1979 ஆம் தேதியிட்ட பதிவு கிரையபத்திரம் அசல் **வா.சா.ஆ.3**. (கூடுதல் அளவுகளை கிரையம் கொடுத்ததாக ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு ) 29.08.1955 ஆம் தேதியிட்ட பதிவு கிரையபத்திர சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**. 23.11.1990 ஆம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திர சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5**. 29.11.1990 ஆம் தேதியிட்ட ஈட்டு கடன் பத்திரம் சார்பதிவு நகல் **வா.சா.ஆ.6.** தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட 19.05.2018 ஆம்தேதியிட்ட நத்தம் நிலவரிபட்டா சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** (தவறான பரப்பளவு டன் கூடியது என்று வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது) (நில அளவை விதிகளை பின்பற்றவில்லை என்ற ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு )தாவா சொத்திற்கான புல வரைபடம் பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.8**. 18.10.2021 ஆம் தேதியிட்ட தாவா சொத்திற்கான சொத்து வரி ரசீது **வா.சா.ஆ.9**. 13.01.2021 ஆம் தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீது **வா.சா.ஆ.10**. 10.02.2022 ஆம் தேதியிட்ட மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.11**. 09.05.2020 ஆம தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்க சான்று கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.12**. 19.04.2018 ஆம்தேதியிட்ட 01.01.1987 முதல் 18.04.1918 வரையிலான தாவா சொத்திற்கான வில்லங்க சான்று அசல் **வா.சா.ஆ.13**. 24.07.2019 ஆம் தேதியிட்ட குறிப்பாணை சார்வு நகல் **வா.சா.ஆ.14**. 30.09.2019 ஆம் தேதியிட்ட திங்கள் தின கோரிக்கையில் மாவட்ட ஆடசியரிடம் கொடுத்த கோரிக்கை மனு கணிணி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.15**. 11.11.2019 ஆம் தேதியிட்ட 1,2 பிரதிவாதிகளுக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.16**. மேற்படி அறிவிப்பினைக 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான

ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.17** . (எ்ண்ணிக்கை 2)  18.12.2019 ஆம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு அஞ்சல் வழி அனுப்பிய பிரிவு 80 சிபிசி அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **வா.சா.ஆ.18**. மேற்படி அறிவிப்பை 3 முதல் 6 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதறகான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் அசல் (எண்ணிக்கை 4) **வா.சா.ஆ.19**. மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட 4 ஆம் பிரதிவாதி 05.02.2020 ஆம் தேதி வட்டாட்சியருக்கு கொடுத்த குறிப்பாணை சார்வு நகல் **வா.சா.ஆ.20**.  21.01.2020 ஆம் தேதி வாதி கல்லக்குடி காவல் நிலையத்தில்  1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக  கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ.21**. 02.06.2020 ஆம் தேதி 4 ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி கொடுத்த மேல்முறையீடு அலுவலக நகல் **வா.சா.ஆ.22**. மேற்படி மேல்முறையீடு மனுவை பெற்றுக்கொண்ட 4 ஆம் பிரதிவாதி 05.08.2020 ஆம் தேதி வட்டாட்சியருக்கு  கொடுத்த குறிப்பாணை சார்வு நகல் **வா.சா.ஆ.23**. தாவா சொத்தை பொறுத்த புகைப்படம் சி.டி-1, புகைப்படம் -5 (எண்ணம் 2) **வா.சா.ஆ.24**. (புகைப்படம் குறியீடு செய்வதற்கான ஆட்சேபனைக்குட்டுபட்டு குறியீடு)வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபாாக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ.25**. வாதி தந்தையின் இறப்பு சான்று அசல்  **வா.சா.ஆ.26**. வாதியின் தாயாரின் இறப்பு பதிவு சான்று அசல் **வா.சா.ஆ.27**. வாதியின் தகப்பனாரின் வாரிசு சான்று **வா.சா.ஆ.28**. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம்  (2) மற்றும் நில அளவையர் வரைபடம்  **நி.ம.சா.ஆ.1 முதல் 3**. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும். (எதிர்தரப்பினரின் ஆட்சேபனை குறித்து வழக்கு இறுதி விசாரணைக்கு பின்பு தீர்வு காணப்படும் )

**கு.வி** - (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/signed/
ஜோசப் ஸ்டீபன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R MOHANA Digitally signed by R MOHANA

Sub Judge,
Lalgudi